# மெட்ரோ ரயில் திட்டத்தை முடக்கிய ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து கோவையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!




கோவை மெட்ரோ ரயில் திட்டத்தை முடக்கிய ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, கோவை ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க. மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் கோவை செஞ்சிலுவை சங்கம் முன்பு கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தலைமையில் மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன், வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், கழக மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி, ஒன்றிய, நகர, கிளைக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மெட்ரோ ரயில் திட்டங்களை முடக்கியுள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# கோவையில் ‘மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி’களின் சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## பல்லாயிரக்கணக்கானோர் திரண்டு கண்டன முழக்கமிட்டனர்!

**கோவை, நவ.21-**

**தமிழ்நாட்டின் மெட்ரோ ரயில் திட்டங்களை முடக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு கண்டனம் தெரிவித்து கோவையில் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது.**

**இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்று ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கமிட்டனர்.**

கோவை மற்றும் மதுரைக்கான மெட்ரோ ரயில் திட்டத்தை நிராகரித்துள்ள ஒன்றிய பா.ஜ.க., அரசைக் கண்டித்து தி.மு.க. தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழ்நாட்டையும், தமிழ் மக்களையும் தொடர்ந்து புறக்கணித்து வரும் ஒன்றிய பா.ஜ.க., அரசு, தற்போது கோவை மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தையும் நிராகரித்துள்ளது. இதற்கு தி.மு.க. தலைமையிலான மத சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் கடும் எதிர்ப்பும், கண்டனமும் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கும் நோக்கோடு செயலாற்றி வரும் மோடி அரசைக் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில், கோயம்புத்தூரில் நேற்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு, முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், முன்னாள் அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி, மேயர் ரங்கநாயகி, தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் துரை.செந்தமிழ்ச் செல்வன், தொண்டாமுத்தூர் ரவி, தளபதி முருகேசன், தி.மு.க. மாணவரணி செயலாளர் வழக்கறிஞர் ராஜீவ்காந்தி, துணை மேயர் வெற்றிச்செல்வன் மற்றும் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, தந்தை பெரியார் திராவிடர் கழகம் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர். மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயல்படும் மோடி அரசுக்கு அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

### மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தை முடக்கியுள்ள

## ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து ‘மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி’களின் சார்பில்

## இன்று மதுரையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

தமிழ்நாட்டிற்கான ஜி.எஸ்.டி. நிதி பகிர்வில் பாரபட்சம், மாணவர்களின் கல்வி நிதியைக் கூட ஒதுக்க மறுப்பது என தமிழ்நாட்டையும், தமிழ் மக்களையும் தொடர்ந்து புறக்கணித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசு தற்போது கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களையும் முடக்கி வஞ்சித்துள்ளது.

தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கும் நோக்கோடு செயலாற்றி வரும் ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து ‘மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி‘களின் சார்பில் நேற்று (20.11.2025 - வியாழக்கிழமை) கோவையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றதை தொடர்ந்து இன்று (21.11.2025 - வெள்ளிக்கிழமை) மதுரையில் காலை 10.00 மணிக்கு “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறும்.

**- மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள்**